JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//455/2018 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | **வீரமணி** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the 04.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் வசந்தகுமார், மாரியம்மாள், சுப்பிரமணியன், புஷ்பவள்ளி, சங்கரம்மாள் ஆகியோர்களை தெரியும். நான் வேலை செய்யும் ஏரியாவில் அவர்களை தெரியும். அசா.1 ராஜேஸ்வரியை தெிரயும். 07.06.2015 ம் தேதி மதியம் 3-3.30 மணியளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு வரும்போது வசந்தகுமார் அவர் வீட்டிற்கு வெளியே நின்றுக்கொண்டிருந்தார். அசா.1 ராஜேஸ்வரி அவரிடம் பேசிக்கொண்டிருந்தார். 4 வருடம் ராஜேஸ்வரியும், வசந்தகுமாரும் பழகிய நிலையில் வசந்தகுமாருக்கு திருமணம் ஏற்பாடு செய்ததால் ராஜேஸ்வரி வசந்தகுமாரிடம் கேட்க வந்தார். அப்போது மாரியம்மாள், அக்கா புஷ்பவள்ளி, சுப்பிரமணியன், வசந்தகுமார் அண்ணன் மனைவி ஆகியோர்கள் வெளியே வந்து வசந்தகுமாரின் அக்கா புஷ்பவள்ளி, வசந்தகுமாரின் அண்ணன் மனைவி ஆகியோர் ராஜேஸ்வரியை தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி தேவடியா முண்ட என்று ஆபாசமாக பேசினார்கள். வசந்தகுமாரும்,

அவரது அண்ணனும் கட்டையை எடுத்து ராஜேஸ்வரியை வலது கை, இடதுகை, முதுகில் அடித்தார்கள். வலி தாங்க முடியாமல் ராஜேஸ்வரி கத்தியவுடன் எதிரிகள் 5 பேரும் இந்த இடத்தை விட்டு போய்விடு இல்லையென்றால் உன்னை வெட்டி கொன்று போட்டுவிடுவோம் என்று மிரட்டினார்கள். அசா.1 ராஜேஸ்வரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய போதிய அவகாசம் வழங்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//455/2018 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | ராஜேஸ்வரி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the 04.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது பாளையங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். எதிரிகள் வசந்தகுமார், மாரியம்மாள், சுப்பிரமணியன், புஷ்பவள்ளி, சங்கரம்மாள் ஆகியோர்களை தெரியும். எதிரி வசந்தகுமாரின் உறவினர்கள். நான் 2012 ல் தென்காசி கிராம நிர்வாக அலுவலகத்தில் தற்காலிகமாக எழுத்தர் வேலையை பார்த்துக்கொண்டிருந்தேன். எனது கணவர் 2012 ல் இறந்துவிட்டார். 2012 ம் ஆண்டு வரை நான் அங்கு வேலை பார்த்தேன். 2012 ம் ஆண்டு நான் வேலை பார்த்தப்போது எதிரி வசந்தகுமார் என்னை திருமணம் செய்வதாக கூறியுருந்தார். வசந்தகுமாரின் வீட்டில் அவருக்கு வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்ய ஏற்பாடு செய்தனர். 07.06.2015 ம் தேதி மதியம் 3.00 மணிக்கு மேல் எதிரி வசந்தகுமாரின் வீட்டிற்கு நான் சென்று கேட்டப்போது அவரது வீட்டின் முன்பு வைத்து எதிரி வசந்தகுமாரின் அண்ணன் மனைவி எதிரி சங்கரம்மாள், எதிரி வசந்தகுமாரின் அக்கா புஷ்பவள்ளி, என்னுடைய தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளினார்கள். எதிரிகள்

அனைவரும் என்னை சேர்ந்து கொண்டு தேவடியா மகளே புண்ட மவளே கல்யாணம் ஆகி புள்ள பெத்த உனக்கு இன்னொரு பையன் கேட்குதா என்று என்னை பார்த்து ஆபாசமாக பேசினார்கள். அவ்வாறு ஆபாசமாக பேசியதால் எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டது. எதிரிகள் வசந்தகுமார் மற்றும் சுப்பிரமணி கீழே கிடந்த கம்பை எடுத்து என்னுடைய இடது மற்றும் வலது கையிலும், என்னுடைய முதுகிலும் அடித்தார்கள். எதிரிகள் அனைவரும் சேர்ந்து கொண்டு இங்கே இருந்து போ இல்லையென்றால் வெட்டி கொன்றுவிடுவேன் என்று சொன்னார்கள். நான் உயிருக்கு பயந்து சத்தம் போட்டேன். அங்கு வீரமணி, லெட்சுமணன் மற்றும் நிறைய நபர்கள் அங்கு இருந்தார்கள். பின்னர் நான் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்மனு நான் கொடுத்தது தான். மேற்படி புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய போதிய அவகாசம் வழங்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi